# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 58/2022 தேதி- 04.08.2025

(P.W.1) - ரமணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பாதை சம்பந்தமாக பிரச்சனை அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். A, B, C பட்டிகை சொத்து என்னுடைய சொத்து ஆகும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆர்டிஓ போட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் வழிப்பாதை எனக்கு மட்டும் சொந்தம் என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனக்கு சொல்லத் தெரியவில்லை. பத்மநாபபுரம் ஆர்டிஓ வை இந்த வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை.

என் வீட்டின் தெற்குபக்கம் குடிசையில் பிரதிவாதி அவரது பிள்ளைகளோடு வசித்து வருகிறார்கள் என்றால் வசித்து வருகிறார்கள். நான் பாதையாக குறிப்பிடும் வழியில்தான் பிரதியின் வீட்டிற்கு மின்சார இணைப்பு செல்கிறது என்றால் அவ்வாறு எதுவும் செல்லவில்லை. நான் பிரதியின் வீட்டிற்கு பாதை வழியாகத்தான் மின்இணைப்பு செல்கிறது என பொய் சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் எதிர்பாத்திய கோரிக்கை ஆகியவற்றை படித்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். பிரதிக்கு 6 1/4 சென்ட் சொத்து உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

பிரதியின் சொத்தின் சர்வே எண் 73/13, 73/14 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் உரிமை ஆவணத்தில் வடக்கு பக்கத்தில் ரோட்டிலிருந்து வரும் வழிப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது அதுபற்றி எனக்குத் தெரியுமா என்றால் அந்த வழிப்பாதை எனக்கு உரிமைப்பட்டது. பிரதிவாதி எனக்கு வழிப்பாதை இருப்பதை அவரது எதிர்கோரிக்கையில் மறுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி 3 அடி வழியாக தன் குடும்பத்தினருடன் சென்று வருவதற்கு பயன்படுத்தினார் என்றால் அதை ஒருபோதும் வேறு யாரும் வழிப்பாதையாக பயன்படுத்தவில்லை.

பிரதியும் அவரது மூதாதையினரும் நெடுங்காலமாக அங்குதான் வசித்து வருகிறார் என்றால் அ துபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு பட்டிகை சொத்திற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன். எனக்கு திருமணம் ஆனபோதிலிருந்து அங்கு இருக்கிறேன். எனது கணவர் என் வீட்டில்தான் இருக்கிறார் இன்று வேலைக்கு சென்றுள்ளார். ஆர்டிஓ அலுவலகத்தில் என் கணவர்தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். நான் திருமணம் ஆகிவருவதற்கு முன்பு உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் Crl. RC(MD). 649/2021 ஐ என் கணவர்தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.12 ஆவணம் மேற்படி Crl. RC(MD). 649/2021 உத்தரவின்படி என் கணவர் தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது ஆனால் அதன் பரிகாரத்தை உரிமையியல் நீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்த உரிமையை என் கணவருக்குத்தான் கொடுக்கப்பட்டது பின்பு எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு உரிமையுள்ளது அதனால் தாக்கல் செய்தேன். என் கணவரை எனது தரப்பு சாட்சியாக அழைக்க முடியுமா என்றால் அழைக்க முடியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 10 ஆவணத்தில் ஆர்டிஓ பிரதிவாதியின் குடும்பத்தார் வழக்கு பட்டிகை சர்வே எண்ணில்தான் வழிப்பாதை உபயோகப்படுத்துவதாக தெரிகிறது என குறிப்பிட்டுள்ளார் என்றால் எனது சர்வே எண் 73/2 அதில் எனது குடும்பத்திற்கு மட்டும் பாதை இருக்கிறது. வா.சா.ஆ. 10 ஆவணத்தில் ஆர்டிஓ பிரதிவாதியின் குடும்பத்தார் வழக்கு பட்டிகை சர்வே சொத்தில்தான் வழிப்பாதை இருப்பதாகவும் அதை பிரதியையும் குடும்பத்தாரையும் தடுக்கக்கூடாது என உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் தவறான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அந்த உத்தரவைதான் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளை இறுதி செய்தது என்றால் உயர்நீதிமன்ற மனுவை தள்ளுபடி செய்து உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு ஏதாவது செய்தோம் என்றால் மேல்முறையீடு செய்யவில்லை. இந்த வழக்கில் ஆர்டிஓ போட்ட உத்தரவை தள்ளுபடி செய்ய எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்டிஓ அலுவலகத்தில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால்

என்னையும் எனது பிள்ளைகளையும் மிரட்டி சாட்சியம் அளிக்க வைத்தார்கள். மிரட்டிதான் கையெழுத்தும் போட்டுக்கொடுத்தேன். என்னை கஷ்டப்படுத்திதான் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னுடைய உரிமை ஆவணம் மற்றும் நில தீர்வை ரசீதை ஆர்டிஓ அலுவலகத்தில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

ஆர்டிஓ எங்களை மிரட்டி வாக்குமூலம் வாங்கியதற்காக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆர்டிஓ உத்தரவு பிறப்பிக்கும் முன்பு அக்கம் பக்கத்திலிருக்கும் அனைவரையும் விசாரித்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சொத்திலிருக்கும் கேட்டை அகற்றுமாறு ஆர்டிஓ உத்தரவு கொடுத்தாரா என்றால் அவ்வாறு உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் புகைப்படம் தாக்கல் செய்துள்ளார் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வரைபடத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்துள்ளேன்.

வரைபடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் என் வீட்டின் தெற்கு பகுதியில்தான் பிரதிவாதியின் வீடு இருக்கிறது என்றால் சரிதான். சி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் பிரதிவாதியின் வீடு உள்ளது. பிரதிவாதிக்கு மாற்று வழிப்பாதை இருப்பதாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடவில்லை. பிரதிக்கு பஞ்சாயத்து மாற்றுப்பாதை இருப்பதாக நான் குறிப்பிடுவது சரிதான் அதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரதிக்கு பஞ்சாயத்து ரோடு இருப்பதாக நான் குறிப்பிடுவதால் பஞ்சாயத்தை சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியாது.

எந்த பஞ்சாயத்தில் வருகிறது என்றால் கோதநல்லூர் பஞ்சாயத்தில் வருகிறது.

(பிரதி வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)